## எடப்பாடி ஆட்சியில் நடைபெற்ற சோதனைகள் என்ன ஆனது?

# ஒன்றிய அரசின் திட்டங்களின் ஊழல்களை மூடி மறைத்தது யார்?

## அமித்ஷாவுக்கு – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கேள்வி!

சென்னை, ஏப்.12-

“ஒன்றிய அரசின் திட்டங்களில் நடைபெற்ற ஊழல்களை மூடி மறைத்தது யார்?” என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து ஒன்றிய பாஜக அமைச்சர் அமித்ஷா எக்ஸ் பதிவுக்கு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தமது ‘எக்ஸ்’ பதிவில் கூறியிருப்பதாவது:

“திமுகவின் ஊழலால் தமிழக மக்கள் சலிப்படைந்துள்ளனர். அதனால் தான் திமுக, தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தை எழுப்பி தங்கள் ஆட்சியில் நடந்த ஊழல்களை மூடி மறைக்கப் பார்க்கிறது” எனப் பொய்யைச் சொல்லியிருக்கிறார் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா.

“ஊழலை ஒழிக்கிறேன்” என ஆட்சியில் அமர்ந்த பிரதமர் மோடி என்ன செய்தார்? எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்கே ’ஊழல் புகார்’ என்ற கேடயத்தைப் பயன்படுத்தினார்.

மோடி பேசிய ’அச்சா தின்’ (நல்ல நாள்) எல்லாம் அம்பானி, அதானி போன்ற கார்ப்பரேட்டுகளுக்குத்தான், அவர்களின் வளர்ச்சிக்குத்தான் ‘வளர்ச்சி’ நாயகன்’ உழைத்தார். அவையெல்லாம் முறைப்படுத்தப்பட்ட ஊழல்கள்தான்!

ஒன்றிய அரசின் திட்டங்களில் நடைபெற்ற ஊழல்களை அம்பலப்படுத்தியது ஒன்றிய தலைமை கணக்குத் தணிக்கை அமைப்பின் (CAG) அறிக்கை. 2023ல் வெளியிட்ட



சி.ஏ.ஜி அறிக்கையில் 7 லட்சத்து ஐம்பதாயிரம் கோடி ரூபாய் மோசடி அம்பலத்துக்கு வந்தது. பாரத் மாலா திட்டம், துவாரகா விரைவுப் பாதை, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சுங்கச்சாவடிக் கட்டண வசூல், ஆயுஷ்மான் பாரத் திட்டம், அயோத்தி மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்டம், ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் லிமிடெட் (எச்.ஏ.எல்.) விமான எஞ்ஜின் வடிவைமைப்பு, ரயில்வே நிதி ஆகியவற்றில் நடந்த முறைகேடுகளால் மத்திய அரசுக்கு 7.5 லட்சம் கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டது.

**ஊழல் புகார் குழி தோண்டி புதைக்கப்படும்!**

ஊழல்வாதிகளைக் காப்பாற்ற 2018 ஊழல் தடுப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வந்தது மோடி அரசு. பொது ஊழியர்கள் மீது விசாரணை நடத்த வேண்டும் என்றால் அந்த துறையின் தலைமை அதிகாரியிடம் சி.பி.ஐயும் லஞ்ச ஒழிப்புத் துறையும் அனுமதி பெற வேண்டும் எனச் சட்டத்தையே மாற்றினார் மோடி. இதனால், ஊழல்வாதிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியாமல் போனது. அந்தத் துறையின் உயர் அதிகாரியே ஊழலில் சம்பந்தப்பட்டிருந்தால் அனுமதி தாமதிக்கப்படுகிறது.

உயர் அதிகாரி அனுமதி மறுத்து விட்டால் புகார் அத்துடன் குழிதோண்டிப் புதைக்கப்படும்.

அமித்ஷா தமிழ்நாடு வரும் போதெல்லாம் அப்போது யார் ஆட்சி செய்து கொண்டிருந்தாலும் ஊழல் அரசு எனப் பேசுவதை வாடிக்கையாக வைத்திருக்கிறார்.

அப்படிதான் 2018 ஜீலை 9 சென்னையில் நடந்த கூட்டத்தில் பேசிய அமித்ஷா ‘நாட்டிலேயே ஊழல் அதிகமாக உள்ள மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது” என்றார். அப்போது எடப்பாடி ஆட்சி தமிழகத்தில் நடந்து கொண்டிருந்தது. அடுத்த ஆண்டே அந்த எடப்பாடி பழனிசாமியோடுதான் 2019 நாடாளுமன்றத் தேர்தலை அமித்ஷா சந்தித்தார். அதன் பிறகு 2021 சட்டமன்றத் தேர்தலில் அதிமுகவுடன் பாஜக கூட்டணி வைத்தது.

**எடப்பாடியை பணிய வைக்க நடத்தப்பட்ட சோதனைகள்!**

எடப்பாடி பழனிசாமியின் உறவினர்கள் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் வீடுகளிலும் அலுவலகங்கள் மீது நடத்தப்பட்ட வருமானவரித் துறை அமலாக்கத் துறை சோதனைகள் எல்லாம் என்ன ஆனது? என்பதை அமித்ஷா தமிழ்நாடு வரும் இந்த நேரத்தில் சொல்லுவாரா? எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் நடந்த ஊழல்கள், ரெய்டுகள், சிபிஜ விசாரணைகள், அமலாக்கத் துறை சோதனைகள் எல்லாமே நாடகம்தான். எடப்பாடி பழனிசாமி ஆட்சியைப் பணிய வைக்கத்தான் அவை பயன்படுத்தப்பட்டன. ஊழலை ஒழிக்கவில்லை. அந்த ஊழல் புகார்களை வைத்து கூட்டணி பேரம் இன்று வரை நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பாஜகவின் கூட்டணிக்கு ஊன்றுகோலாக ஊழல்கள்தான் இருக்கின்றன.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி தமது ‘எக்ஸ்’ தளத்தில் பதிவிட்டுள்ளார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 60 மாற்றுத் திறனாளிகளுக்கு இனைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட இருசக்கர வாகனம் மற்றும் 93 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கான ஆணைகளை கழக நாடாளுமன்றக்குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி வழங்கி மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 180 அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, கனிம வளத்துறையின் சமுதாய பங்களிப்பு நிதியின் மூலம் தேவையான பரிசோதனை உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கினார். உடன், அமைச்சர் கீதா ஜீவன், மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலையில் முன்னாள் அமைச்சர் ப.உ.ச. அவர்களின் 18ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அவரது நினைவிடத்தில், பொதுப்பணி துறை அமைச்சர் எ.வ.வேலு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். உடன் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை எம்.பி., பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, இரா.ஸ்ரீதரன், ப.கண்ணன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், நிர்மலாவேல்மாறன், டி.வி.எஸ்.இராஜாராம் உட்பட பலர் உள்ளனர்.

### முதல்வர் ஆலோசனையோடு

# கேரளாவில் உள்ள கண்ணகி கோயிலை மேம்படுத்த நடவடிக்கை!

### சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு விளக்கம்!

சென்னை, ஏப்.12-

சட்டப்பேரவையில் கேள்வி இது குறித்து நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு :-


**கம்பம் நா.இராமகிருஷ்ணன்:** வண்ணாத்திப் பாறை, மங்கலதேவி கண்ணகி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** 1800 ஆண்டுகளுக்குமுன்பு, கட்டப்பட்ட மங்கலதேவி திருக்கோயில் இந்தத் திருக்கோயில் முழுவதுமாக சிதலமடைந்த நிலையில் இருக்கிறது. இந்தத் திருக்கோயிலுக்கு செல்வதற்கு மூன்று வழிகள் பயன்படுத்தப்படுகின்றன. பளியங்குடி கிராமத்தின் வழியாகவும், மற்றொன்று கூடலூர் கிழக்கு வழியாகவும், இன்னொரு வழி குமுளி வழியாகவும் மூன்று வழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த வழி முழுவதும் வனத் துறை பாதுகாப்பில் இருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஓர் ஆய்வினை, பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர் நயினார் நாகேந்திரன் கோரிக்கையை ஏற்று ஆய்வு செய்தபோது, இதை முழுமையாக ஆய்வு செய்து, மூன்று வழித் தடங்களையும் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில், கேரளா அரசாங்கம் ஏற்கெனவே *Mangala Devi Trust* என்ற ஓர் அமைப்பு, கேரளா அரசாங்கத்தின் *ASI control*-ல் இருக்கிற இந்த திருக்கோயிலை, திருச்சி *ASI control*-லுக்கு மாற்ற வேண்டுமென்ற ஒரு வழக்கை உச்சநீதிமன்றத்தில் தொடுத்தார்கள். உச்சநீதிமன்றம், இந்த வழக்கை நீங்கள் கேரளா நீதி மன்றத்திற்குக் கொண்டு சென்று தீர்வு காண வேண்டுமென்று சொல்லி, அந்த வழக்கைத் திருப்பியிருக்கிறார்கள். அந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது.

இதுசம்பந்தமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்



19-1-2025 அன்று சென்னைக்கு வந்திருந்த கேரளாவினுடைய முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களைச் சந்தித்து, அன்றைக்கு துறையின் செயலாளராக இருந்த சந்திரமோகன் அவர்களையும் உடன் அழைத்துச் சென்று அவர்களிடம் இந்தக் கோரிக்கையை வைத்தோம்.

கோரிக்கையின் அம்சம் என்னவென்றால், இந்தத் திருக்கோயில் ஆண்டுக்கு ஒரு முறை சித்திரா பௌர்ணமி அன்றுதான் திறக்கப்படுகிறது. எனவே, அக்கோயிலை மாதாமாதம் பௌர்ணமி அன்று திறக்க வேண்டும் என்பது ஒரு கோரிக்கை.

இரண்டாவது கோரிக்கை, அந்தத் திருக்கோயிலை தமிழ்நாடு அரசே முழுவதுமாக புனரமைப் பதற்கு அனுமதிக்க வேண்டும்.

மூன்றாவது கோரிக்கை, வனத் துறையுடன் இணைந்து திருக்கோயிலை புனரமைக்கும் பணிகளை ஆய்வு செய்ய வேண்டும்.

நான்காவது கோரிக்கையாக, தமிழ்நாட்டிலிருந்து அதிகப்படியாக ஐயப்ப பக்தர்கள் செல்லுகிற சபரிமலைக்கு, ஐந்து ஏக்கர் நிலம் தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டுமென்ற நான்கு கோரிக்கைகளையும் வைத்து, கேரளாவின் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடத்த வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறோம். இதுகுறித்து விரைவில் ஒரு கலந்தாய்வுக் கூட்டத்தை ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்திருக்கிறார்.

ஆகவே, கேரளாவில் அமைந்திருக்கிற கண்ணகி கோயிலை மேம்படுத்தவும், மாதந்தோறும் பக்தர்கள் சென்று வழிபடுவதற்கு உண்டான வழி காணவும் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையோடு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நா.இராமகிருஷ்ணன்:** பாண்டிய மன்னன் நீதி தவறியதால், கோவலன் கொல்லப்பட்டதற்கு நீதி கேட்ட கண்ணகி, பசுக்கள், பத்தினிப் பெண்டிர், ஆன்றோர், முதியோர், குழவியர்களை தவிர்த்து மதுரையை தீக்கு இரையாக்கிவிட்டு, மேற்கு வாயில் வழியாக நடந்து சென்று, வள்ளல் நதி என்கின்ற வைகையை கடந்து, கூத்தனாட்சி கோயில் மற்றும் பத்தினிக் கோட்டமாம் சாமுண்டீஸ்வரி கோயிலை கடந்து, வான் பொய்த்தாலும் தான் பொய்க்காத இருவேள் குன்றம் என்கிற சுருளி மலையையும் கடந்து, இறுதியாக பதினான்காம் நாளில் வண்ணாத்திப் பாறை என்கிற விண்ணகத்துப் பாறையில் கோவலனை சந்தித்து, மங்கலநாண் அணிவித்து விண்ணேறியதாக இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் எழுதியிருக்கும் காட்சியை குன்றக் குறவர்கள் என்ற வணிகர்கள் கண்டு, அச்செய்தியை சேரன் செங்குட்டுவனிடம் சொல்ல, சேரன் செங்குட்டுவன் இமயமலைக்குச் சென்று கல் எடுத்து வந்து, அந்த இடத்தில் மங்களதேவி கோட்டத்தை கட்டி, காலத்தினால் அது சிதிலமடைந்து, பின்னர் இரண்டாம் சோழ மன்னனால் புனரமைத்து, பாண்டிய மாறவர்மன் மற்றும் குலசேகர பாண்டிய மன்னன் மற்றும் நாயக்கர் மன்னர்களால் அது பராமரிக்கப்பட்டு, இந்த நிலையில் வருடத்திற்கு ஒரு முறை சித்திரா பௌர்ணமி அன்று கோயிலுக்கு, 50,000-க்கும் மேற்பட்ட தமிழ்நாடு பக்தர்கள் (மணியடிக்கப்பெற்றது) குமுளி வழியாகச் செல்லுகின்ற பளியன்குடி அல்லது தெல்லுக்குடி வரையிலான சாலையைச் சீரமைத்து வண்ணாத்திப் பாறை, மங்கல தேவி திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு செய்து, பக்தர்கள் வழிபட அமைச்சர் ஆவன செய்வாரா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** இந்தத் திருக்கோவில் சம்பந்தமாக எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பான நீண்டநெடிய விளக்கத்தை ஏற்கெனவே தெளிவாக எடுத்துக் கூறினோம். கிட்டத்தட்ட 12 கி.மீ. கண்ணகி கோயிலுக்கு செல்கின்ற வழி இருக்கின்றது. இந்த சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் முடிந்தவுடன், அந்தத் திருக்கோயிலில் தரிசிப்பவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற சிரமங்களை உணர்ந்து, உறுப்பினர் அவர்களையும் என்னுடன் அழைத்துச் சென்று, அந்த 12 கி.மீ. தூரம் நடந்து சென்று என்னென்ன வசதிகளை மேற்கொள்ளலாம் என்பதை ஆய்வு செய்த பிறகு, மீண்டும் அடுத்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே அதற்குண்டான கேள்வியைக் கேட்கின்றபோது மீண்டும் தெளிவான விளக்கத்தைத் தருகின்றேன்.

**நா.இராமகிருஷ்ணன்:** 1883, 1885 மற்றும் 1915 ஆம் ஆண்டுகளில் ஒன்றிய அரசின் நில அளவை *survey*-ன்படி கண்ணகி கோயில் தமிழ்நாட்டுக்கே சொந்தம், உரிமை என்பது தெரிய வருகிறது. எனவே, அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே, பளியன்மார்களுக்கு வண்ணான் மானியம், அம்மன் மானியம், அந்தக் கோயிலைப் பராமரிப்பதற்கு 100 ஏக்கர் நிலம் வழங்கியதற்கு உண்டான சான்றுகளும், கல்வெட்டுச் சான்று, இலக்கியச் சான்று, ஆவணச் சான்று, நிலகடச் சான்று போன்றவையும் நமக்குச் சாதகமாக இருக்கின்ற காரணத்தினால் அமைச்சர் அவர்கள் குடமுழுக்கு செய்து, உதயசூரியன் தினம்தினம் உதிப்பதுபோல, தினமும் பக்தர்கள் சென்று அங்கே கண்ணகியை வழிபடுவதற்கு ஆவன செய்வாரா?

அதேபோல் உத்தம பாளையம் ஞானாம்பிகை சமேத காலத்தீஸ்வரர் திருக்கோயில், சின்னமனூர் சிவகாமி அம்மன் திருக்கோயில், சுருளி வேலப்பர் என்ற சுப்ரமணியசுவாமி திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மற்றும் குடமுழுக்கு செய்வதற்கு ஆக்கப்பூர்வமாக உதவி செய்திட்ட முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அன்புச் சகோதரர் பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும், நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து அமைகின்றேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** அவர் கோரிய கம்பராயப் பெருமாள், காசி விஸ்வநாதர் திருக்கோயில் ஆகிய இரண்டு கோயில்களும் ஒரு சேர அமைந்த திருக்கோயில். 19 இலட்சம் ரூபாய் செலவில் அந்த திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மூன்று மாத காலங்களில் அத்திருப்பணிகள் நிறைவுறும்.

அவர் கோரிய இரண்டு திருக்கோயில்களினுடைய திருமண மண்டபங்களில், ஒன்றான காலத்தீஸ்வரர் கோயிலினுடைய திருமண மண்டபத்தினுடைய ஒப்பந்தம் இன்றைக்கு திறக்கப்பட இருக்கின்றது. இன்னும் பத்து, பதினைந்து நாட்களுக்குள் அந்தப் பணிகளைத் துவக்கிவிடலாம். இன்னொரு திருக்கோயிலினு டைய திருமண மண்டபம் கேட்டார். 4 கோடியே 36 இலட்சம் ரூபாயில் அதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டிருக்கின்றது. ஒப்பந்தம் கோரப்பட்டு இரண்டொரு மாதங்களில் அந்த திருப்பணியும் துவக்குவோம்.

உறுப்பினரின் கோரிக்கைகள் அனைத்தும் ஏற்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, அதற்குண்டான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### திருவண்ணாமலையில் – கு.பிச்சாண்டி தலைமையில்

# முன்னாள் அமைச்சர் ப.உ.சண்முகம் 18 ஆம் ஆண்டு நினைவு நாள்!

### நினைவிடத்தில் – அமைச்சர் எ.வ.வேலு – கழகத்தினர் மரியாதை!

திருவண்ணாமலை, ஏப். 12-

திருவண்ணாமலையில் முன்னாள் அமைச்சர் ப.உ.ச. அவர்களின் 18ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அவரது நினைவிடத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் கழக முன்னோடிகள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

திருவண்ணாமலையில் நேற்று (11.04.2025 வெள்ளிக்கிழமை), காலை 9.30 மணிக்கு, முன்னாள் அமைச்சரும், திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடியுமான ப.உ.ச. அவர்களின் 18ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி, மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகித்தார்.

மாநில மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா. ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் அமைச்சர் ப.உ.ச.அவர்களின் நினைவிடத்தில் பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் செய்திருந்தார்.

நிகழ்ச்சியில் திருக்குறள் பேரவை ப.கண்ணன், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், தொ.மு.ச.மாநிலத் துணைத் தலைவர் க.சௌந்தரராசன், அறங்காவலர் குழுத் தலைவர் இரா.ஜீவானந்தம், அறங்காவலர் குழு உறுப்பினர் டி.வி.எஸ்.இராஜாராம், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, சு.விஜி (எ) விஜயராஜ், கு. கணேஷ், கற்பகம் சரவணன், மாவட்டப் பிரதிநிதி கள் குட்டி க.புகழேந்தி, அ. கண்ணன், மு.ஹக்கிம்சேட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் பா.ஷெரீப், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, ஜவுளி. தினகரன், எஸ்.சமயராஜ், அ.மோகன்ராஜ், ஏ.எம். பாஷா, ராயல்.தியாகு, ஆ. தே.முருகையன், நகரமன்ற உறுப்பினர் அ.கோவிந்தன், கோபி.சங்கர், கு.ராஜாமணி, துரை.வெங்கட் மற்றும் சா.ரகுநாத், எம்.வினோத் குமார், செ.எழில்மாறன், எஸ்.கே.டி.வீரா, ஜெயசீலன், டிராக்டர் இராமு, சம்மந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக்

# பி.என்.அம்மாவாசி தந்தை நல்லுத்தேவர் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப்.12-

அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் கட்சியின் நிறுவனத் தலைவர் பி.என்.அம்மாவாசி அவர்களின் தந்தை நல்லுத்தேவர் அவர்கள் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் கட்சியின் நிறுவனத் தலைவர் பி.என்.அம்மாவாசி அவர்களின் தந்தையார் நல்லுத்தேவர் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருந்தினேன்.

தன்னை வளர்த்து ஆளாக்கிய தந்தையை இழந்து தவிக்கும் அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் கட்சியின் நிறுவனத் தலைவர் பி.என்.அம்மாவாசி மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் - அவரது கட்சி நிர்வாகிகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.